




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (25.11.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 828/2016 நாள்: 25.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (25.11.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (25.11.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் கடந்த மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 61 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 6 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 61 என மொத்தம் 128 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

குறும்பனை கடற்கரை கிராமத்திலுள்ள மின் கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு, மாற்றப்பட்டு வருகிறது. எனினும் மேம்பாடிட்டு திட்டத்தின்கீழ், மின் கம்பிகளின் தரம் உயர்த்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அனுமதி ஆகியுள்ளது. மின் கம்பிகள் விரைவில் மாற்றப்படும் எனவும், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடி பயணிகள் நிழற்கூடம் அருகில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மின் கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மதிப்பீட்டு கட்டணமாக ரூ.4835/- 10.11.2016 அன்று தமிழ்நாடு மின்வாரியம், குளச்சல் அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த வாரம் இறுதிக்குள் மின் விளக்கு அமைக்கப்படும் என்று தமிழ்நாடு மின்வாரியத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டது எனவும், குளச்சல் மீன்பிடித்துறைமுக வளாகத்தில் உள்ள கழிவு நீர் ஓடையை சுத்தம் செய்து, கழிவு நீர் தேங்கி நிற்காமல் இருப்பதற்கு தகுந்தாற்போல் காங்கிரீட் கலவையினால் விரைவில் சரி செய்து கொடுக்குமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும், மீனவர் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகளால் மீன்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களுக்கு பட்டா வழங்கிட உரிய ஆணைகள் வழங்கிடக் கேட்டு, மீன்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், இரவிபுத்தன்துறை மற்றும் தூத்தூரை சார்ந்த சூசம்மை மற்றும் அமலதாசன் ஆகியோருக்கு முதியோர் உதவித்தொகையும், பூத்துறையை சார்ந்த அந்தோணியம்மாள் மற்றும் ரோசம்மை ஆகியோர்களுக்கு விதவை உதவித் தொகையும் வழங்கப்படும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லாமக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.